இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 16-08-2024

# மீனவர்கள் இந்தியர்கள் இல்லையா?

வங்க தேசத்து அதிபரை பத்திரமாக மீட்டு அடைக்கலம் தரும் அக்கறையில் நூற்றில் ஒரு பங்காவது இந்திய மீனவர்களைக் காப்பதில் இருக்க வேண்டாமா? இலங்கைக் கடற்படையால் தினம் தாக்கப்படும், கைது செய்யப்படும் நம் நாட்டு மீனவர்கள், 'இந்திய' மீனவர்கள் இல்லையா? ஏன் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு அக்கறை இல்லை?

இலங்கைக் கடற்படையால் அவ்வப்போது கைது செய்யப்பட்டு வந்த மீனவர்கள் இப்போது தொடர்ந்து கைது செய்யப்படுவதற்கு என்ன காரணம்? இந்தியப் பிரதமர் மோடி மீது பயமில்லையா? அல்லது எத்தனை பேரைக் கைது செய்தாலும் அவர் கேட்க மாட்டார் என்பது அவர்களுக்கும் தெரிந்து விட்டதா?

கடலில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களை கைது செய்வது, இலங்கை சிறையில் அடைப்பது, தாக்குவது, சுடுவது, வலைகளைப் பறிப்பது, படகுகளை உடைப்பது, படகுகளை பறிமுதல் செய்வது ஆகிய குற்றச் சம்பவங்கள் தொடர்ந்து நடக்கிறது. ஒன்றிய பா.ஜ.க. அரசு அமைந்ததற்குப் பின்னால் இந்த பத்தாண்டு காலத்தில் 3 ஆயிரத்து 76 மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளார்கள். கடந்த ஜூன், ஜூலை மாதத்தில் மட்டும் நூற்றுக்கும் அதிகமான மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இந்த ஆண்டில் மட்டும் 215 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

"இத்தனை பேர் கைது செய்யப்படுகிறார்கள்" என்று குற்றம் சாட்டினால், "இத்தனை பேரை விடுவித்தது எங்கள் சாதனையல்லவா" என்று இரக்கமில்லாமல் பதில் சொல்கிறார்கள். இலங்கைக் கடற்படையைக் கண்டித்தும், கைது செய்யப்பட்ட மீனவர்களை உடனே விடுதலை செய்யக் கோரியும் பாம்பன் வடக்கு கடல் பகுதியில் நாட்டுப் படகு மீனவர்களும், பாதிக்கப்பட்ட மீனவர்களின் குடும்பத்தினரும் போராட்டம் நடத்தி இருக்கிறார்கள்.

மீண்டும் மீண்டும் கைது செய்து கொண்டிருக்கிறது இலங்கைக் கடற்படை.

**★ மே மாதத்தில் 18 மீனவர்கள் கைது செய்யப்பட்டார்கள்.**

**★ ஜூன் 1 ஆம் நாள் தமிழ்நாட்டைச் சேர்ந்த 25 மீனவர்களை இலங்கைக் கடற்படை கைது செய்திருக்கிறது.**

**★ ஜூன் 17 ஆம் நாள் இராமநாதபுரம் மீனவர்கள் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.**

**★ ஜூன் 25 ஆம் நாள் நாகப்பட்டினம் மீனவர்கள் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.**

**★ ஜூலை 1 ஆம் நாள் ராமேஸ்வரம் மீனவர்கள் 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.**

**★ ஜூலை 23 ஆம் நாள் 9 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.**

**★ ஜூலை 31 ஆம் நாள் நடுக்கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த ராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவரின் படகை இலங்கைக் கடற்படை கப்பல் மோதி விபத்தை ஏற்படுத்தி இருக்கிறது. இதில் மலைச்சாமி என்பவர் உயிரிழந்தார். மற்றொரு மீனவரைக் காணவில்லை.**

**★ ஆகஸ்ட் 3 ஆம் நாள் புதுக்கோட்டை மீனவர்கள் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.**

**★ ஆகஸ்ட் 9 ஆம் நாள் ராமநாதபுரம் பாம்பன் மீனவர்கள் 33 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.**

- இவ்வளவையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

"மீனவர்களைத் தொடர்ந்து கைது செய்வதன் மூலமாக மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. இலங்கை அரசால் கைது செய்யப்பட்ட மீனவர்களையும் அவர்களின் படகுகளையும் உடனடியாக விடுவிக்க வேண்டும். விடுவிக்கப்பட்ட படகுகளை இலங்கையில் இருந்து கொண்டு வருவதற்கும் அனுமதி முறையாக வழங்கப்படுவது இல்லை" என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து ஒன்றிய அரசை வலியுறுத்தி வருகிறார்கள். ஆனால் ஒன்றிய அரசு, இலங்கை மீது எந்த நடவடிக்கையும் எடுக்கத் தயாராக இல்லை.

**கைது செய்வதும், விடுவிக்கப்படுவதும் வழக்கமான ஒன்றாக ஆகிவிட்டது இலங்கை அரசாங்கத்திற்கு. எதிர்க்கட்சியாக இருந்தபோது மோடி என்ன சொன்னார்? "இலங்கைக் கடற்படை இப்படிச் செய்கிறது என்றால் மன்மோகன் சிங் என்ற பலவீனமான பிரதமர் ஆள்வதால்தான் இது நடக்கிறது. பலமான பிரதமர் ஆண்டால் நடக்காது" என்றார் மோடி. மூன்றாவது முறை பிரதமர் ஆகும் அளவுக்குப் பலம் படைத்தவர் மோடி என்பது இலங்கை அரசுக்கு ஏன் தெரியவில்லை?**

கைது செய்யப்பட்ட மீனவர்களை நிரந்தரமாக சிறையில் அடைக்கிறார்கள். ரூ.40 லட்சம், ரூ.50 லட்சம் என்று அபராதம் விதிக்கிறார்கள். அதைக் கட்ட முடியாவிட்டால் மூன்றாண்டு சிறைத் தண்டனை தரப்படுகிறது. முதல் தடவை கைதானால், இரண்டாவது தடவை கைதானால், மூன்றாவது முறை கைதானால் என்று தண்டனையை அதிகப்படுத்திக் கொண்டே போகிறார்கள். மீனவர்களை விடுவித்தாலும் படகுகளைத் தருவது இல்லை. இப்படி 300க்கும் மேற்பட்ட படகுகள் இலங்கையில் பயனற்றுக் கிடக்கிறது. கடலை நம்பி மீன் பிடிக்கும் மீனவர்களின் வாழ்வாதாரத்தையே இது சிதைத்து விடுகிறது.

**இலங்கை மிக மிக பலவீனமான நாடு. அரசியல் நிலைப்புத்தன்மை இல்லாத நாடு. அதுவே இந்த ஆட்டம் ஆடுகிறது என்றால் 'இந்தியாவை' பற்றிய பயம் இல்லை என்று தான் பொருள்.**

**நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக தமிழ்நாட்டு மீனவர் நலன் காக்க கச்சத்தீவை மீட்கப் புறப்பட்ட பிரதமர் மோடி, அமைச்சர் அமித்ஷா, அமைச்சர் நிர்மலா ஆகியோர் என்ன ஆனார்கள்? நீங்கள் கச்சத்தீவை மீட்பதை அப்புறம் பார்க்கிறோம். சிறையில் அடைபட்டிருக்கும் இந்திய மீனவர்களை மீட்கும் தைரியசாலிகள் என்பதைக் காண்பியுங்கள்...!**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (14.08.2024) முகாம் அலுவலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அவர்கள் சந்தித்து பழனியில் நடைபெறவுள்ள அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டிற்கான அழைப்பிதழை வழங்கினார். உடன் திருமதி துர்கா ஸ்டாலின் மற்றும் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலர் டாக்டர் பி.சந்தரமோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார், அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டு ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினர்கள் தவத்திரு திருவண்ணாமலை ஆதீனம் பொன்னம்பல தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், தவத்திரு பேரூர் ஆதீனம் முனைவர் சாந்தலிங்க மருதாசல அடிகளார், தவத்திரு சிரவை ஆதீனம் குமரகுருபரசுவாமிகள், தவத்திரு மயிலம் பொம்மபுர ஆதீனம் ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள், சுகி சிவம், மு.பெ.சத்தியவேல் முருகனார், திருமதி தேசமங்கையர்க்கரசி ஆகியோர் உள்ளனர்.

### தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுதிய

# "நாடாளுமன்றத் தேர்தல் - 40/40 தென் திசையின் தீர்ப்பு" நூல்!

## பொதுச்செயலாளர் துரைமுருகன் வெளியிட, கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு பெற்றுக் கொள்கிறார்!

சென்னை, ஆக.16-

தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ள தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் எழுதிய "நாடாளுமன்றத் தேர்தல் 2024 - 40/40 தென் திசையின் தீர்ப்பு" வரலாற்றுத் தேர்தல் ஆவண நூல் வெளியிடப்படுகிறது.

கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் அவர்கள் வெளியிட பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., அவர்கள் பெற்றுக் கொள்கிறார்.

சர்வாதிகாரத்திற்கும் ஜனநாயகத்திற்கும் இடையே நடந்த போர்தான் 18வது நாடாளுமன்ற மக்களவைத் தேர்தல்.

"400 இடங்களை கைப்பற்றுவோம்" எனச் சொன்ன பா.ஜ.க.வை தனித்து அரசு அமைக்க முடியாத நிலைமையை உருவாக்கியது இந்தியா கூட்டணி. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை மாற்ற நினைத்த பிரதமர் மோடியை, அண்ணல் அம்பேத்கர் அளித்த அரசியல் சாசன சட்டப்புத்தகத்திற்கு முன்னால் தலைகுனிந்து வணங்க வைத்திருக்கிறது தி.மு.க. அங்கம் வகிக்கும் 'இந்தியா' கூட்டணி.

**சரித்திர சாதனை – ஆவணமாக பதிவு!**

தமிழ்நாடு புதுச்சேரியில் நாற்பதுக்கு நாற்பது என்கிற வரலாற்று வெற்றியை தி.மு.க. கூட்டணி பெற்றது. அந்த சரித்திர சாதனையை ஆவணமாக பதிவு செய்கிறது முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுதிய '40/40 தென் திசையின் தீர்ப்பு' புத்தகம்.

இந்நூலினை சென்னை, கலைஞர் அரங்கில் இன்று (16.8.2024 - வெள்ளிக்கிழமை), காலை நடைபெற உள்ள "தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்ட"த்தில் கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் அவர்கள் வெளியிட, கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., அவர்கள் பெற்றுக் கொள்கிறார்.

**'இந்தியா' கூட்டணிக்கான விதை!**

2024 மக்களவைத் தேர்தலில் நாற்பதுக்கு நாற்பது வெற்றியை தி.மு.க. கூட்டணி எப்படிச் சாத்தியமாக்கியது?, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அமைத்த தேர்தல் வியூகம், 2023ல் இந்தியா கூட்டணிக்கு விதை போட்ட சென்னை ஒய்.எம்.சி.ஏ.வில் நடந்த மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா, பாட்னா, பெங்களூரு, மும்பை ஆகிய இடங்களில் நடந்த இந்தியா கூட்டணிக் கூட்டங்கள், தி.மு.க. வாக்குச்சாவடி பொறுப்பாளர்களுக்கு அளிக்கப்பட்ட பயிலரங்கம், கூட்டணிக் கட்சிகளுக்கிடையே நடந்த தொகுதிப் பங்கீடு, தி.மு.க. தேர்தல் அறிக்கை, கழக வேட்பாளர்கள் பற்றிய விவரங்கள், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பங்கேற்ற தேர்தல் பரப்புரை கூட்டங்கள், பல்வேறு ஊடகங்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அளித்த சிறப்புப் பேட்டிகள், தி.மு.க.வின் தேர்தல் விளம்பரங்கள், 40/40 வெற்றியை தந்த தேர்தல் முடிவுகள், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் வென்ற தேர்தல்கள், புள்ளிவிவரங்கள், ஏராளமான படங்கள், இன்ஃபோகிராபிக் என விரிவாகப் பதிவு செய்திருக்கிறது 'தென் திசையின் தீர்ப்பு' நூல். 40/40 வரலாற்றுச் சாதனை போல இந்த புத்தகமும் ஓர் வரலாற்றுத் தேர்தல் ஆவணம்!

இவ்வாறு தலைமைக் கழகம் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

### விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா பேச்சுப் போட்டி!

## மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி அறிக்கை!



விழுப்புரம், ஆக. 16 -

விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன் கௌதமசிகாமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா பேச்சுப் போட்டி கழகத் தலைவர் முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆலோசனைப்படி கழக இளைஞர் அணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின் படி நாளை (17.08.2024 சனிக்கிழமை) காலை 9 மணி அளவில் விழுப்புரம் கலைஞர் அறிவாலயம் தளபதி அரங்கத்தில் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளராகிய எனது (டாக்டர். பொன்.கௌதமசிகாமணி) தலைமையில் நடைபெறுகிறது.

விழாவில் கழக துணைப் பொதுச்செயலாளர் - உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்களும், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் அப்துல் மாலிக் அவர்களும் சிறப்புரை ஆற்றுகிறார்கள். மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செ.தினகரன் வரவேற்புரை ஆற்றுகிறார். மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எஸ்.அன்பு, டி.டி.ஜெ.ராஜவேல், எஸ். பாலாஜி, ஏ.சி. கே.பிரேம், ப.கலைவாணன், ஏ.கே.தேவேந்திரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். போட்டியின் நடுவர்களாக ஆலந்தூர் ஒப்பிலாமணி, இந்திரகுமார் தேரடி, கலைஞர் டிவி உமா ஆகியோர் பங்கு பெறுகின்றனர். சட்டமன்ற உறுப்பினர்கள் அன்னியூர் அ.சிவா, டாக்டர் இரா இலட்சுமணன், மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் ம.ஜெயச்ச ந்திரன் , மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக் குழு இணைச் செயலாளர் செபுஷ்பராஜ், மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.என்.முருகன், தயா. இளந்திரையன், இரா கற்பகம், மகளிர் அணி பிரச்சார குழுச் செயலாளர் எம். தேன்மொழி ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

நகர இளைஞர் அணி அமைப்பாளர் செ.மணிகண்டன் நன்றியுரையாற்றுகிறார். நிகழ்வில் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

